
## வகுப்பு 8 (தமிழ்)

| பரிந்துரைக்கப்படும் கற்பித்தல் செயல் முறைகள் | கற்றல் விளைவுகள் |
| --- | --- |
| **கற்போருக்கு தனியாகவோ / இணையாகவோ / குழுவாகவோ / கற்க உதவும் வாய்ப்புகளை வழங்கி கீழ்க்காண்பனவற்றைப் ஊக்கப்படுத்த வேண்டும்.**<br>• தங்கள் சொந்த மொழியில் பேசவும் கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல்.<br>• பாடப்பொருள்களைத் தமது சொந்த வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி அதனைப் புரிந்துகொள்ள வாய்ப்பளித்தல்.<br>• தாம் பயன்படுத்தும் மொழியின் நுட்பமான கூறுகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்தல்.<br>• குழுவாகப் பணியாற்றவும், ஒருவர் பணி மீது மற்றவர் கருத்துக் கூறவும், எண்ணங்களின் பரிமாற்றத்திற்கும், வினாக்கள் எழுப்பவும் போதிய சுதந்தரம் அளித்தல்.<br>• (தமிழ் மொழிப்பாடத்துடன்) தங்களது சொந்தமொழியில் உள்ளவற்றைப் படிக்கவும், கலந்துரையாடவும் வசதி செய்து தரல் (இச்செயல்பாடுகளில் ஈடுபட பிரெய்லி மற்றும் சைகை மொழிப் பொருட்கள் அளித்திடல் வேண்டும்).<br>• தாங்கள் வாழும் சமூகம், காலம், சுற்றுப்புறம் பற்றிய கட்டுரைகளைப் படிக்கவும், கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல்.<br>• தங்கள் சொந்த மொழியில் மொழி விளையாட்டுகள், பாடல், கடிதம் எழுதுதல், நகைச்சுவைகளைக் கூறுதல் போன்ற எழுதுதல் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தல்.<br>• செய்தித்தாள், இதழ்கள் படித்தல், திரைப்படங்களைத் திரையிடல், காட்சி கேள்விப் பொருள்களைக் கண்டு, கேட்டு | **கற்போர்**<br>• மாணவர்கள், பல்வேறு வகையான தலைப்புகளில் பாடப் பொருள்களின்மீது எழுதப்பட்டவற்றைப் படித்துக் கலந்துரையாடச் செய்தல் (பாடப்பகுதியில் உள்ள ஒரு குறிப்பிட்ட பறவையின் விவரிப்புடன், பறவைகள் பற்றிய ஆய்வாளரான சலிம் அலியின் புத்தகத்தைத் தொடர்புபடுத்திக் கூறல்.)<br>• செய்தித்தாள்கள், இதழ்கள், கதைகள், தகவல் பகுதிகள் இணையம் போன்றவற்றில் தமிழில் உள்ள பல்வேறு வகை எழுத்துகளைப் படித்துப் புரிந்துகொண்டு, அவற்றின் மீது கருத்துரை பகர்தல், முடிவு கூறல் மற்றும் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்துதல் (வாய்மொழி வழி அல்லது சைகை வழி)<br>• படித்தவற்றைப் பற்றிச் சிந்தனை செய்து வினாக்கள் எழுப்பிப் புரிதலை மேம்படுத்திக் கொள்ளல்.<br>• தமது சுற்றுப்புறத்தில் வழங்குகின்ற நாட்டுப்புறப்பாடல்கள், நாட்டுப்புறக்கதைகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுதல்.<br>• எதையும் படித்து முடித்த பின்னர், தமக்குத் தெரியாத சூழல்கள் / நிகழ்வுகள் பற்றிக் கற்பனை செய்து புதிய மனப்பிம்பங்களையும் சிந்தனைகளையும் உருவாக்கி வெளிப்படுத்துதல் (வாய்மொழி வழி / சைகை மொழியில்).<br>• சாதி, மதம், நிறம், பாலினம் மரபுகள் போல்வன குறித்த உணர்வுப்பூர்வமான சிக்கல்கள் பற்றி நண்பர்கள் ஆசிரியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் |



உணரச் செய்தல் ஆகியவற்றின் வழி விழிப்புணர்வையும் செயல்பாட்டினையும் மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பளித்தல். இவற்றை மேற்கூறிய கூற்றுகளிலிருந்து தங்கள் கருத்துகளை எழுத்து வடிவில் வெளியிட உதவுதல்.


- கற்பனைத் திறனையும், படைப்பாற்றலையும் மேம்படுத்தும் செயல்பாடுகளை ஏற்பாடு செய்தல் வேண்டும். (பங்கேற்று நடித்தல், கதை படித்தல், எழுத்தில் புதியன புனைதல், இருவர் உரையாடல், அறிக்கைகள் தாக்கல் செய்தல் போல்வன.)

வினாக்கள் எழுப்புதல் (எ.கா. ஒரு குறிப்பிட்ட விழா கொண்டாடப்படும் முறை பற்றிப் பேசுதல்)

- கதைகள், பாடல்கள் கட்டுரைகள், அறிக்கைகள், நினைவுகள், நகைச்சுவை போன்ற பல்வேறு வகைப்பட்டவற்றைப் படிக்கும்போது அவற்றை நுட்பமாக ஆய்வு செய்து சில குறிப்பிட்ட செய்திகளைக் கண்டறிதலும் ஊகித்தறிதலும்.
- ஒரு கட்டுரையைப் படித்த பின்னர் அதன் சமூக மதிப்புகள் குறித்துக் கலந்துரையாடல், சில வினாக்களுக்கு விடை காண முற்படல். (எ.கா.) தனது சுற்றுப்புறத்தில் வாழும் குடும்பங்கள் பற்றிச் சிந்தித்தல்: இதன் தொடர்ச்சியாக, ராமு மாமாவின் பெண் குழந்தை ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை ? என்ற வினாவை எழுப்புதல்.
- படித்தனவற்றைப் பற்றி நன்கு சிந்தித்துப் புரிதலை மேலும் சிறப்பாக்குதல்.
- பல்வேறு வகை படித்தல் பொருட்களில் காணப்படும் சொற்கள், தொடர்கள் மரபுத்தொடர்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு நயம் பாராட்டுதல்.
- படித்த பிறகு பல்வேறு எழுத்தியல் நடைகளையும் முறைகளையும் (விவரண முறை, வரைபடமுறையில் உணர்ச்சிப் பூர்வமான நடை, இயற்கை அழகின் வருணனை முறை போன்றவை) இனங்காணுதல்.
- படிக்கும்போது படைப்பாளியின் சொற் சித்திரத்தினை நயம்படப் பாராட்டித் தமது கல்வி நிலைக்கு ஏற்ப அதை வெளிப்படுத்தல் (பேச்சு எழுத்து, பிரெய்லி எழுத்து, சைகை மொழி வழியில்)



- தேவைப்படின் பார்வை நூல்களாகிய அகராதிகள், தேசப்படங்கள், கலைக்களஞ்சியம் போன்றவற்றையும் இணையத்தளத்தையும் பொருத்தமான முறையில் பயன்படுத்துதல். பிறர் உதவியை நாடியும் இதனைச் செய்யலாம்.
- தான் எழுதுவதைப் படிப்பவர் மற்றும் எழுத்தின் நோக்கம் ஆகியவற்றை மனதில் கொண்டு பயன் விளைவிக்கும் வகையில் எழுதுதல்.
- தாம் அறிந்திராத சூழல்களைப் பற்றிக் கற்பனை செய்தும் நிகழ்வுகள் பற்றி மனத்தில் உருவகித்தும்; அவற்றைப் பற்றிச் சிந்தித்தும் எழுத்து வழி வெளிப்படுத்தல் (பிரெய்லி முறைமை வழியும்)
- மொழி பற்றிய நுட்பங்களை அறிந்து அவற்றைத் தம் மொழியில் எழுதும்போது பயன்படுத்துதல் (சொற்களை மாற்றுவதன் மூலம் பாடலின் சந்தத்தில் ஏற்படும் ஓசை நயத்தைப் புரிந்துகொள்ளுதல்)
- மற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட சூழலில் சொன்ன சொற்களைப் பிறிதொரு சூழலில் தனது மொழிநடையில் பயன்படுத்துதல் (பள்ளி நிகழ்வுகள் விழாக்கள் பற்றி அறிக்கை தயார் செய்தல், கிராமச் சந்தையில் கடைக்காரருடன் வாடிக்கையாளர் உரையாடுதல்).
- தமது சொந்த அனுபவங்களைத் தமக்கே உரிய மொழிநடையைப் பயன்படுத்தி வெவ்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதுதல் (கதை, கட்டுரை, பாடல் வடிவில் அனுபவங்களை வெளிப்படுத்தல்).
- அன்றாட வாழ்வில் நிகழும் குறிப்பிடத்தக்க அனுபவங்களை (நிகழ்வுகள், சூழல்கள்)



புத்தாக்க முறையில் வெவ்வேறு வழிகளில் (சமூக ஊடகங்கள், நோட்டுப் புத்தகம், பதிப்பாளருக்குக் கடிதம் எழுதுதல்) எழுதுதல்.

- கைவினைப் பொருட்கள் தயாரித்தல், கட்டடக்கலை, உழவுத் தொழில், விதைவிதைத்தல், நாட்டியம், மெய்ப்பாடுகள் முதலான செயல்பாடுகளில் பயன்படும் சொற்களைப் பயன்படுத்தி எழுதுதல்.
- படிப்பவரின் தரம், எழுத்தின் நோக்கம் ஆகியவற்றை மனத்திற்கொண்டு பயன் விளையுமாறு தன்னைத்தானே வெளிப்படுத்துதல்.
- பாடல், கட்டுரை, கதை எழுதும்போது, பல்வேறு புலப்பாட்டு உத்திகளையும் முறைகளையும் இனம்கண்டு அவற்றைப் பயன்படுத்துதல்.
- தாம் படிக்கும் முன்னர் அறிந்திராத சூழல்கள், நிகழ்வுகள் ஆகியன பற்றிக் கற்பனை செய்து அவற்றை மனப் படிமங்களாகவும், சிந்தனையாகவும் மாற்றி வெளிப்படுத்துதல் (பொது எழுத்து, பிரெய்லி எழுத்து வழி).

